DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.24/2024**
**P.W. 12**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.டாக்டர்.பிரேமலதா காந்தி |
| Father's Name | : | திரு.மோகன்தாஸ் காந்தி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 57 |

(Accused 1 and 2 absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30th day of July 2025.

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது தனலெட்சுமி சீனிவாசன் பல்கலைகழகத்தில் உள்ள மருத்துவக்கல்லூரியில் முதுகலை பட்ட மேற்படிப்பு சமுதாய மருத்துவ பிரிவில் முதலாம் ஆண்டு பயின்று வருகிறேன். நான் திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் அவரச சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது கடந்த 29.01.2024 ம் ஆண்டு இரவு 8.39 மணியளவில் விஜய் மாணிக்கம், 28 வயது, த/பெ.நல்லையன் என்பவரை மண்ணச்சநல்லூரில் இருந்து அசோக் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு எண்.161/2024 ன் அடிப்படையிலும், அந்த நபரை தனிப்பட்ட விதத்தில் விசாரித்ததின் அடிப்படையிலும் அவரை அடையாளம் தெரியாத இரண்டு ஆண் நபர்கள் 29.01.2024 அன்று இரவு 7.30 மணியளவில் அவரது வீட்டின் அருகே வைத்து கத்தியால் தாக்கியதாகவும், அதனால் ஏற்பட்ட காயங்களுக்கு மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி பெற்று பின் மேல்சிகிச்சைக்காக மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனைக்கு வந்ததாகவும் தெரிவித்தார்.

அவரை மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனையின் விபத்து பதிவேட்டில் பதிவு செய்துள்ள காயங்களின் அடிப்படையில் பரிசோதித்து அவரை மேல்சிகிச்சைக்காக அறுவை சிகிச்சை பிரிவில் உள்நோயாளியாக அனுமதித்தேன். அவர் சிகிச்சை முடிந்து 01.02.2024 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். மருத்துவ ஆவண எண்.M–1457, நாள் 29.01.2024 ன் படி எடுக்கப்பட்ட நுண்கதிர் படத்தில் எந்தவித எலும்பு முறிவும் காணப்படவில்லை என்பது தெரியவந்ததால் அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை சாதாரண காயங்கள் என்று 23.03.2024 அன்று சான்று அளித்தேன். நான் வழங்கிய விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று **அ.த.சா.ஆ.8** ஆகும்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை போலிசார் விசாரிக்கவில்லை. அந்த நபருக்கு ஏற்பட்ட காயம் சிராய்ப்பு காயமா, கிழிந்த காயமா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த நபர் என்னிடம் தன்னை ஜாதி குறித்து திட்டி காயம் ஏற்படுத்தியதாக கூறவில்லை. பாதிக்கப்பட்ட நபருக்கு எங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வருவதற்கு முன்பாகவே தையல் போடப்பட்டிருந்தது. அந்த விவரத்தை விபத்து பதிவேட்டில் சொல்லவில்லை.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

AdaPa